**27.08.2024.**

**CC.No. 31/2023**

எ.சா.1 <u>சரவணபவா</u>

<u>குறுக்குவிசாரணை</u>

1) புகார்தாரரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 2014 ல் இருந்து தெரியும். நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுதத்தெரியும். புகார்தாரரின் வட்டி கடைக்கும் எனது கடைக்கும் சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் இருக்கலாம். எனது கடை பேரூராட்சி அலுவலகத்திற்கு அருகிலும் புகார்தாரரின் கடை புதிய பேருந்து நிலையத்திற்கும் அருகிலும் உள்ளது. 2014 ல் எனது தாயார் பத்திர பதிவு அலுவலகம் வந்து புகார்தாரர் பெயரில் அடமானக்கடன் பத்திரம் பதிந்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி அடமான கடனை ரத்து செய்வதற்கும் எனது தாயார் பத்திர பதிவு அலுவலகம் வந்து ரத்து செய்தார் என்றால் நான் வெளிநாட்டில் இருந்தேன் எனக்கு சரியாக தெரியாது. மேற்படி அடமான பத்திரத்தில் எந்த தேதியில் கடன் வாங்கியது, எவ்வளவு வட்டி என்ற விபரம் இருக்கும் என்றால் சரிதான்.

2) அடமானம் ரத்து செய்ததற்கான ரசீது அசல் என்னிடம்தான் உள்ளது என்றால் சரிதான். அடமான கடன் பத்திரம் அசல் என்னிடம்தான் உள்ளது என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்ய தயாரா இருக்கிறேனா என்றால் அசல் அடமான பத்திரத்தை புகார்தாரர் வாங்கி கொண்டார். ரசீது மட்டும்தான் என்னிடம் உள்ளது. பதிவுத்துறையில் இருந்து கொடுத்த ரசீது மட்டும்தான் உள்ளது. அடமான அசல் பத்திரம் எனது தாயாரிடம் உள்ளதா என்று கேட்கவேண்டும். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை என்னுடையதுதானா என்றால் என்னுடையதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. காசோலையை நான் புகார்தாரரிடம் நான் கொடுக்கும் போது நான் யாருடைய வற்புறுத்தலும், அச்சுறுத்தலும் இல்லாமல் தன்னிச்சைகயா கொடுத்தேன் என்றால் சரிதான். என் தாயார் கடன் பெற்றதற்காக பொறுப்பிற்காக கொடுத்தேன்.

3) இவ்வழக்கை பொறுத்து என் தாயார் முக்கியமான சாட்சி என்றால் சரிதான். என் தாயாரை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் நான் தயாராக இருக்கிறேன் ஆனால் என் தாயாருக்கு உடல் நிலை சரியில்லாததால் அவரின் ஒப்புதல் பெறவேண்டும். நான் புகார்தாரரிடம் கொடுத்ததாக சொல்லும் 3 காசோலைகளில் வழக்கில் தாக்கல் செய்த காசோலையை தவிர மற்ற காசோலைகளின் எண்கள் என்ன என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. எனது கடையில் இருந்து 600 முதல் 700 மீட்டர் தூரத்தில்தான் சாக்கோட்டை காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு காசோலையை எப்போது stop payment செய்தேன் என்றால் 2022 மேமாத இறுதியில் எனது காசோலையை வைத்து வழக்கு போடுவேன் என்று புகார்தாரர் மிரட்டியதால் நான் வங்கியில் stop payment கொடுத்தேன். புகார்தாரரிடம் நான் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டேன் என்றும், புகார்தாரர் எனது 3 காசோலைகளை வைத்து வழக்கு தாக்கல் செய்யப்போவதாக மிரட்டுவதாக காசோலை எண்கள் குறிப்பிட்டு நான் stop payment கொடுத்தேனா என்றால் இல்லை அப்போது வழக்கு தாக்கல் செய்யவில்லை. அதனால் மேற்படி காரணம் குறிப்பிட்டு stop payment செய்யவில்லை.

4) எனது காசோலைகளை வைத்து மிரட்டுவதாக காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் 2022 பிப்ரவரி மாதம் முதல் கொலை மிரட்டல் விடுத்தார். நான் புகார்தாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. புகார்தாரர் இவ்வழக்கு காசோலை சம்பந்தமாக அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அறிவிப்பு கிடைத்தது. மேற்படி அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். ஏனெனில் புகார்தாரர் மீது காவல் நிலையத்தில் புகார் நிலுவையில் இருந்தது. அடமானகடன் பத்திரத்தில் அடமானகடன் கொடுப்பவரிடம் எந்ததெந்த ஆவணங்கள் ஒப்படைக்கபடுகிறது என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலை அடங்கிய காசோலை புத்தகத்தில் எத்தனை காசோலைகளை இருந்தது என்றால் சரியாக நினைவில்லை. குறைந்தது 10 காசோலைகள் இருக்கும் என்றால் சரிதான். காசோலை புத்தகம் எப்போது வங்கியில் இருந்து பெறப்பட்டது என்றால் எனக்கு சரியாக

நினைவில்லை.

5) புகார்தாரரிடம் கொடுத்ததாக சொல்லப்படும் 3 காசோலைகளை தவிர மற்ற காசோலைகளை நான் எதற்கும் பயன்படுத்தவில்லை. மேற்படி காசோலை புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் வீடு காலி செய்தபோது தொலைந்து விட்டது. காசோலை புத்தகம் எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்றும், புகார்தாரரிடம் கொடுத்த காசோலைகளை தவிர மற்ற காசோலையை நான் எவ்வாறு பயன்படுத்தினேன் என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக அதை மறைத்து நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2018, 2019, 2020, 2021, 2022ம் ஆண்டுகள் வரை எந்த தேதியில் எந்த வகையில் புகார்தாரரிடம் பணம் கொடுத்தேன் என்றால் நிறைய பரிவர்த்தனைகள் இருந்ததால் தற்போது என்னால் சொல்ல முடியவில்லை. நான் முதல் விசாரணையில் தேதி வாரியாக புகார்தாரரிடம் பணம் கொடுத்ததாக சொல்லியிருப்பது சாட்சி சொல்வதற்காக குறிப்பெடுத்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

6) நான் முதல் விசாரணையில் குறிப்பெடுத்து சாட்சியம் அளித்ததால் எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படியும், இந்திய சாட்சிய சட்டத்தின் படியும் குறிப்பெடுத்து சாட்சியம் அளிக்க எதிரிக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் கடந்த 19.09.2022 அன்று கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனுவில் நான் புகார்தாரரின் கடைக்கு சென்று எனக்கு சொந்தமான சொத்தை விற்று பணத்தை எடுத்துக்கொள்ளும்படி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மனு ரசீது எண் 877/2022 என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நான் சொல்ல சொல்ல எழுத்தரால் தட்டச்சு மற்றும் பேனாவால் தயாரிக்கப்பட்ட புகார். முதலில் பேனாவால் எழுதிக்கொடுக்கப்பட்டது. பின்னர் காவல் துறையின் அறிவுறுத்தலின் பேரில் பின்னர் தட்டச்சு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டது. நான் பேனாவால் எழுதப்பட்ட புகார் சம்பந்தமாக முதல் விசாரணையில் புகார்தாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்கள்

குறித்து தட்டச்சில் தட்டச்சு செய்யப்பட்டு புகார் கொடுக்கப்பட்டது. நான் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்த புகாருக்கு மனு ரசீது கொடுக்கப்பட்டது என்றாலும், தட்டச்சு செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட புகாருக்கு மனுரசீது கொடுக்கப்படவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) எனது தரப்பில் வடக்கு காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.சா.ஆ. 2 ஆவணம் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வடக்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகார்மனுவில் இவ்வழக்கு காசோலை பற்றி நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். மேற்படி புகார்மனுவில் நான் புகார்தாரரிடம் ரூ. 3 லட்சத்து 50 ஆயிரம் பணம் பெற்று மாதம் ரூபாய் 14,500/- வட்டி செலுத்திவருவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி புகாரில் புகார்தாரர் மேலும் தொகை கேட்டு கொரோனா காலக்கட்டத்தில் தொந்தரவு செய்வதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 2019 மார்ச் முதல் 2021 மே மாதம் வரை கொரோனா காலக்கட்டம் என்றால் இரண்டு முறை கொரோனா வந்தது. நான் வடக்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு சம்மன் வந்தது என்றால் சரிதான். மேற்படி புகார் தொடர்பாக சம்பந்தப்பட்ட காவல் துறையினரை ஆவணங்களை தாக்கல் செய்ய சொல்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் சரிதான்.

8) இவ்வழக்கு தொடர்பான விபரங்கள் என்னையும், என் தாயாரையும் தவிர எனது நண்பர் சகுபர் சாதிக் என்பவருக்கு தெரியும். சகுபர் சாதிக் என்பவர் மக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கிய பிரமுகர் என்றால் சரிதான். தமிழ் நாட்டில் பல் வேறு காவல் நிலையத்தில் அவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் உள்ளது என்றால் அது அவரது தனிப்பட்ட விவகாரம். அவர் எனது குடும்ப நண்பர். அவர் அனைத்து காவல் துறையினருக்கும் மிக நெருக்கமானவர் என்றால் சரியல்ல. எந்த அளவிற்கு நெருக்கமானவர் என்பது எனக்கு தெரியாது. அவர் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகளில் அடிக்கடி பொய் சாட்சியம் அளிக்கக்கூடியவர் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரரிடம் பெற்ற கடனை புகார்தாரருக்கு செலுத்த தயாராக இருக்கிறேன்

என்றாலும், என் நண்பர் சகுபர் சாதிக் தலையிட்டு பணத்தை கொடுக்கவேண்டாம் என்றும் அவர் பார்த்துக்கொள்வதாக சொல்லியதன் பேரில் நான் புகார்தாரருக்கு பணத்தை தர மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

9) 2014 முதல் 2022 வரை புகார்தாரரிடம் பல்வேறு தேதிகளில் கடன் பெற்று அதனை சரியாக நான் திருப்பி செலுத்தி வந்தேன் என்றால் என் தாயார் பெற்ற கடனை தவிர நான் புகார்தாரரிடம் எந்த கடனும் தனிப்பட்ட முறையில் வாங்கியதில்லை. என் தாயார் வாங்கிய கடன் தொடர்பாக புகார்தாரரிடம் சுமார் ரூ. 8 லட்சத்து 50 ஆயிரம் செலுத்தியிருக்கிறேன். மேற்படி விபரத்தைதான் நான் வடக்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் சொல்லியிருக்கிறேன். நான் புகார்தாரரிடம் 10.01.2022 அன்று ரூ. 6 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதை திருப்பி செலுத்தும் விதமாகத்தான் இவ்வழக்கு காசோலையை முன்தேதியிட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் வடக்கு காவலநிலையத்தில் கொடுத்த புகாரை தயாரித்த எழுத்தர் வடக்கு காவல்நிலையத்திற்கு முன்பு இருக்கும் எழுத்தர் என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது.

10) வடக்கு காவல்நிலையத்தில் கொடுக்காத புகாரை நான் மோசடியாக உற்பத்தி செய்து தாக்கல் செய்திருக்கும் விபரம் தெரிந்து விடும் என்பதால்தான் மேற்படி எழுத்தரை எனக்கு தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 19.09.2022 அன்று நான் புகார்தாரரால் நான் தாக்குதலுக்கும், அச்சுருத்தலுக்கும் உள்ளாகி இருந்ததாக சொல்லப்படும் நிலையில் விவேகமுள்ள எந்த ஒரு மனிதனாலும், நான் தாக்கல் செய்துள்ள புகார் மனுவை உற்பத்தி செய்து தாக்கல் செய்ய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் பெற்ற கடனை மோசடி செய்வதற்காக பின்யோசனையிட்டு பல்வேறு நபர்களிடம் கருத்து கேட்டு மோசடியாக தயாரிக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. புகார்தாரர் புதுவயலில் வட்டி கடை மற்றும் காரைக்குடியில் இருசக்கர வாகனத்திதற்கு கடன் கொடுக்கும் கடை நடத்தி வருகிறார் என்றாலும், புகார்தாரர் வசதி வாய்ப்பு உள்ள நபர் என்றாலும் சரிதான். தற்போது எந்த அளவிற்கு வசதியானவர் என்று எனக்கு தெரியாது என்று சாட்சி பின்னிட்டு கூறுகிறார்.

11) நான்  புகார்தாரருக்கு கொடுக்கவேண்டிய பணத்திற்கு மோசடி செய்யவேண்டும் என்பதற்காக எனது நண்பர் சகுபர் சாதிக்குடன் நான் சேர்ந்து  திட்டமிட்டேன் என்றால் சரியல்ல. கடந்த 19.09.2022 ற்கு முன்பு 7  மாதகாலத்திற்கு முன்பிருந்தே புகார்தாரரிடம் இருந்து எனக்கு மிரட்டல் வந்தது.  மேற்படி மிரட்டல் சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் என் சூழ்நிலை கருதி நான் புகார் அளிக்கவில்லை. என்னை தொலைபேசியில் மிரட்டியதாக வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  புகார்தாரர் என்னை எந்த காலத்திலும் மிரட்டவில்லை என்றால் சரியல்ல.  வழக்கு காசோலை தொடர்பான தொகையை செலுத்த நான் சட்டபடி கடமைபட்டவன் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு வழக்கு காசோலையை கொடுத்து மோசடி செய்ததற்காக நான் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டியவன் என்றால் சரியல்ல.

சாட்சியால˙ திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால˙ தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா,  B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி,  காரைக்குடி.